




# ஜமாலியன் டைம்ஸ்

தமிழ் மாத இதழ்

இதழ் 7 சுற்று 5 | JAMALIAN TIMES | ஆகஸ்ட், 2023


### ஜமால் முகமது கல்லூரியில் படித்த

## முன்னாள் மாணவர்கள் சங்கமிக்கும்

### விருது வழங்கும் விழா









திருச்சி, ஆக.18: திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் படித்த முன்னாள் மாணவர்கள் சங்கமம்; விருது வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி ஆண்டுதோறும் ஆகஸ்ட 15ம் தேதி இந்திய சுதந்திர தினத்தன்று உலகம் முழுவதும் இயங்கி வரும் கல்லூரியின் மேனாள் மாணவர் சங்கங்கள் சங்கமிக்கும் நிகழ்ச்சியையும் தகைசால் மேனாள் மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்ச்சியையும் நடத்தி வருகிறது.

ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் 1963 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு இந்தியாவில் சென்னை, பெங்களூர், கோழிக்கோடு, திருச்சி மற்றும் ஐக்கிய அரபு நாடுகள்,பக்ரைன், சிங்கப்பூர், மலேசியா, ஜித்தா, குவைத், அமெரிக்கா,புருனை, கத்தார், ஆகிய வெளிநாடுகளிலும் மனித இனத்திற்கு மகத்தான சேவை செய்யும் பொருட்டு செயல்பட்டு வருகிறது.

ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் 1963 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு உலகம் முழுவதும் குறிப்பாக அமெரிக்கா, ஜித்தா, ஐக்கிய, அரபு அமீரகம், பஹ்ரைன், குவைத், சிங்கப்பூர், மலேசியா,புருனை, கட்டார், ஆகிய நாடுகளிலும் சென்னை, கோழிக்கோடு, திருச்சி, பெங்களூர், கூத்தாநல்லூர் ஆகிய நகரங்களிலும் ஜமால் முகமது கல்லூரியின் மேனாள் மாணவர் சங்கங்கள் இயங்கி வருகின்றது. இவ்வாண்டும் இன்று மிகுந்த உட்சாகத்துடன் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் காஜாநஜிமுதீன் முன்னிலை வக்க்க நடந்த இந்நிகழ்வில் ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவரும் தகைசால் மேனாள் மாணவர்களுக்கான விருது பெறுபவருமான சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையத்தின் சிறப்பு பேராசிரியர் முனைவர் ஏ.ராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழா பேருரையாற்றினார். அவர் தம் உரையில் ஜமால் முகமது கல்லூரியில் தான் பயின்ற கால் நினைவுகளை பகிர்ந்தார்.

மேலும், தன் வாழ்வில் ஒவ்வொரு தருணத்திலும் முஸ்லீம்களின் பங்களிப்பை பற்றி கூறினார். செயற்கை நுண்ணறிவு (புழுவீனுாய்னுா–ளீனுாபுஸி னுாஹவீச்ஸிஸினுா–றுாச்ஹளீச), மெஷின் லேர்னிங் (னிபு–ளீக்ஷினுாஹச் ஸிச்புழுஹினுாஹறுா), மாற்று ஆபரேட்டிங் ஸிஸ்டம் (புஸிவீச்யூஹபுவீனுாச் நுஊணச்யூபுவீ–னுாஹறுா நீக்ஷூறீவீச்னி) ஆகியவை வருங்காலங்களில் வேலைவாய்ப்பை அதிகம் கொடுக்கக்கூடிய துறைகள் எனவே மாணவர்கள் இவைகளை முழுமையாக கற்க வேண்டும் என்று கூறினார்.

இவ்வாண்டிற்கான தகைசால் மேனாள் மாணவர்களுக்கான விருதினை பெறுபவர்கள்:சார்ஜாவின் ஜிபிசிஏ கிரசிங் மற்றும் குவாரி ஆபரேஷன் நிறுவனத்தின் ஓய்வு பெற்ற தயாரிப்பு மேலாளர் அப்துல் கனி குலாம் முஹம்மது, மலேசியா மஹ்ஷா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ர:ஃபீயுதீன் பின் வருசைமுஹம்மது, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் கே.எம்.முகமது ஷேக் தாவூத், ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் துணை முதல்வர் முனைவர் ஏ.முகமது இப்ராஹிம், ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் கூடுதல் துணை முதல்வர் முனைவர் எம்.முகமது சிகாபுதீன், ஜித்தா, தேசிய உணவு நிறுவனத்தின் தளவாடங்கள் அதிகாரி அன்வர், இந்திய விமான நிலைய ஆணையர், தென் மண்டல நிர்வாக தொழில்நுட்ப ஆலோசகர் கே.முரளி, புருனை றீவீய்றீ–ஐயஜூ– இயக்குனர் என்.எஸ் சமீம்அகமது, பரமக்குடி லுமூசின் மேல்நிலைப்பள்ளியின் உதவித்தலைமை ஆசிரியர் முனைவர் எம்.பெரோஸ்கான் அமெரிக்கா ஸ்டரி அசோசியேட்ஸ் நிறுவனத்தின் ஆரக்கள் செயலியின் மூத்த ஆலோசகர் சாஜஹான் சாஹிப்,கேரளா கோழிக்கோடு பளூக் கல்வியியல் பயிற்சிக்கல்லூரியின் உதவி பேராசிரியர் முனைவர் அபி:ஃப்த ரவாதத், சென்னை விஷன்ஸ் ஆப்டிகல்ஸின் நிர்வாக இயக்குனர் திரு.எ.நைனா முகம்மது,குவைத் தேசிய பெட்ரோலியம் நிறுவனத்தின் ஆய்வாளர் ஜலாலுதீன் வருசைமுகமது, சிங்கப்பூர் சோலார்வின்ஸ் நிறுவனத்தின் மூத்த பொறியாளர் ஐ.ஜமீல் முகமது மன்சூர், சென்னை இன்:ஃபோசிஸ் நிறுவனத்தின் மூத்த திட்ட மேலாளர் பி.எஸ்.அப்துல் காதர் பைசல் மற்றும் துபாய் தேசிய எண்ணை கிணறு நிறுவனத்தின் மூத்த தணிக்கையாளர் காஜாமைதீன் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக ஜமால் முகமது கல்லூரியின் மேனாள் மாணவர்கள் சங்கங்களின் பொதுச்செயலாளர் ஜாகிர் உசேன் வரவேற்புரை வழங்கினார்.

மேனாள் மாணவர் சங்க துணைச் செயலாளர் சையது அலி பாதுஷா ஆண்டறிக்கையை சமர்பித்தார். கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை உரையாற்றினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் காஜாநஜிமுதீன், பொருளாளர் ஹாஜி ஜமால் முகமது,உதவிச்செயலர் அப்துஸ்சமது, கல்லூரி நிர்வாக குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குனர் அப்துல் காதர் நிஹால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி மேனாள் மாணவர்களுக்கான விருதினை வழங்கினர்.

கல்லூரியின் கூடுதல் துணை முதல்வர்கள் முனைவர் இஷாக் அஹமது,ஹாஜாமுகைதீன் மற்றும் செல்வி ஃபமிதாபானு,விடுதி நிர்வாக இயக்குனர் முகமது பாசில்,மகளிர் விடுதி இயக்குனர் செல்வி ஹாஜிரா பாத்திமா,நிர்வாக குழு உறுப்பினர்கள், முன்னாள் பேராசிரியர்கள் பல்வேறு முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். இறுதியாக கல்லூரியின் துணை முதல்வர் ஜார்ஜ் அமலரத்தினம் நன்றியுரை கூறினார்.




## 77TH INDEPENDENCE DAY CELEBRATIONS















### திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இயற்பியல்துறை சார்பில்

## சந்திரயான் – 3 விண்கலம் இறங்கும் நேரடி காட்சி ஒளிபரப்பு



திருச்சி, ஆக.24– திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இயற்பியல்துறை சார்பில் நேற்று மாலை இந்தியாவின் சந்திரயான்–3 விண்கலம் தரையிறங்குவது தொடர்பான நேரடி காட்சிகள் ஒளிபரப்பும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த காட்சியை கல்லூரியின் விடுதி மற்றும் கல்லூரி மாணவர்கள் சுமார் 200 பேர் கண்டுகளித்தனர். மேலும் வெற்றிகரமாக தரையிறங்கியதை மாணவர்கள் உற்சாகமாக கைத்தட்டி இதற்காக அரும்பாடுபட்ட இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

ஜமால் முகமது கல்லூரியில் பைந்தமிழ் இயக்கம் சார்பில்

# செய்குத்தம்பி பாவலர் பிறந்த நாள் விழா









திருச்சி, ஆக.3– ஜமால் முகமது கல்லூரி தமிழ்த்துறையும் திருச்சி பைந்தமிழியக்கமும் இணைந்து நூற்று நினைவகர் செய்குத்தம்பி பாவலர் பிறந்த நாள் விழா கல்லூரியின் அல்மன்கல் குளிர்மை அரங்கில் நடை பெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் சை.இசுமாயில் தலைமையில் துறைப்பொறுப்பாளர் பேராசிரியர்

க. இக்பால் அனைவரையும் வரவேற்றார். பொருளாளர் ஹாஜி எம்.சே. சமால் முகமது, உதவிச்செயலர் அப்துல் சமது, துறைத்தலைவரும் தேர்வு நெறியாளருமான பேராசிரியர் சையத் சாகீர் அசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பைந்தமிழ் இயக்கத்தின் இயக்குநர் புலவர் பழ. தமிழாளன் நோக்கவுரையில் இனம் மொழி நாட்டினத்தின்மீது பற்றுக்கொண்டு அன்னை தமிழுக்குத் தொண்டு செய்வதனை நோக்கமாகக் கொண்டு செயலாற்ற வேண்டும்' என மாணவர்களிடம் எடுத்துரைத்தார். தொடர்ந்து துணை இயக்குநர் பாவலர் சொ.வேல்முருகன் பாடலின் சிறப்பினை மாணவர் உள்ளம் பதியுமாறு சிறப்பாக எடுத்துரைத்தார்

சிறப்புக் கருத்தரங்க நிகழ்ச்சியில் சிராசுதீன் (உதவிப்பேராசிரியர்) செந்தமிழ்ச் செம்மல் சி.யு. போப் என்ற பொருளிலும், முனைவர் கு.நாராயணசாமி (உதவிப்பேராசிரியர்) இலக்கிய இமயம் மு.வ. என்ற பொருளிலும் உரையாற்றினர்.

இந்நிகழ்வில் நூற்று நினைவகர் செய்குத்தம்பி பாவலரின் பெயரன்

எச். சையது உதுமான் ஆப்பிரிக்காவில் இருந்து விழாவில் பங்கு கொண்டு தாத்தாவின் நெஞ்சந் தாங்கிய எண்ண அலைகளை உணர்வு பொங்க எடுத்துரைத்தார். பின்னர் மேனாள்

தூயவளனார் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் இ.சூசை நூற்று நினைவகர் (சதாவதானி) செய்குத் தம்பி பாவலர் எனும் தமிழாளுமை என்ற பொருளில் ஆய்வுரையாற்றினார்.அவர் தன்னுரையில் செய்குத்தம்பி பாவலர் பேராசியர் பணியாற்றவில்லை எனினும்

பதிப்புத்துறையில் பணிபுரிந்த பாவலர்தமிழ் இலக்கண இலக்கியப்பு லமையாளர் நினைவாற்றல்மிகுதியா கப்பெற்ற பெருந்த கை.

1907–ம் ஆண்டு மார்ச் 10 தேதி சென்னையில் உள்ள விக்டோரியா மன்றத்தில் தமிழறிஞர் முதுகுளத்தூர் கலியாண சுந்தரம் தலைமையில் பல தமிழறிஞர்கள் முன்னிலையில் இவருடைய நினைவாற்றல் ஆய்வு செய்யப்பட்டு அவருடைய நினைவாற்றலை உணர்ந்து நூற்று நினைவகர் (சதாவதானி) என்று அன்று முதல் அழைக்கப் பெற்றார் என்று அவரின் சிறப்புகளை எடுத்துரைத்தார்

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சேலத்திலிருந்து வந்த லட்சுமி இரும்பு வணிக முதுநிலை மேலாளரும் துணை இயக்குநர் பாவலர் சொ.வேல்முருகனின் நண்பருமான

பாவலர் ஆதி நாராயணனுக்கு தமிழ்த்துறை தலைவர் அ.சையத் சாகீர் அசன் பொன்னாடை அணிவித்துச் சிறப்புச் செய்தார். உதவிப்பேராசிரியர் சுகவனேசுவரன் நன்றி கூறினார். உதவிப்பேராசிரியர் முகமது காசிசு நிகழ்வைத்தொகுத்து வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் முனைவர்கள் திருமாறன். தமிழகன், யூனுசு மற்றும் அறிவியலறிஞர் தங்கவேலு, வழக்கறிஞர் பாலகிருட்டினன், காசிநாதன், மகேந்திரன், மணி, பானுமதி. சின்னதம்பி, உட்படப்பேராசிரியர்களும் தமிழார்வலர்களும் மாணவர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

கணிதத்துறையில்

# முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி



திருச்சி, ஆக.15: திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கணிதத்துறையில் 43 ஆண்டுகளுக்கு முன்பாக (1977– 80) இளநிலை அறிவியல் கணிதம் பயின்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி, கல்லூரி முதல்வர் எஸ்.இஸ்மாயில் மொஹைதீன், துறைத்தலைவர் (பொ) ஆர்.ஜாகிர் ஹூசைன் மற்றும் துறை பேராசிரியர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை முகமது அஸரப் அலி, ராஜராஜன் ஆகியோர் தங்களோடு பயின்ற கல்லூரி தோழர்களோடு இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.



ஜமால் முகமது கல்லூரி – பெண்கள் பிரிவின் தமிழாய்வுத் துறையில் முக்கூடல் சங்கத்தின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழா 01–08–2023



As per direction of Directorate of Collegiate Education, Tamilnadu, a Pledge was taken on National Integration and communal Harmony "Sadbhavana Diwas" on 19.08.2023 at Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli.



The 50th Installation and Release of JAMFO (49th Edition) of Rotaract Club of Jamal Mohamed College was held on 10th August, 2023.



The PG and Research Department of Physics, Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli made arrangement for the students to witness the Zero Shadow Day at exactly 12.17 p.m. on 25-08-2023 at Jamal Mohamed Astro laboratory.



CONSOLIDATED REPORT OF TWO DAYS WORKSHOP ON ICT ENABLED LEARNING 1st & 2nd August, 2023

ஜமாலியன் டைம்ஸ்
Show Us The Right Path · Since 1951
தமிழ் மாத இதழ்

ஆசிரியர்
முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன்
M.Sc., M.Phil., PGDCA., Ph.D.,
கல்லூரி முதல்வர்

செய்தி ஆசிரியர்
K. சண்முக வேலாயுதம்
M.A., M.Phil.,SET.,
துறைத் தலைவர் (காட்சித் தொடர்பியல் துறை)

இணை ஆசிரியர்கள்
D. பிரதீபன் M.Sc., SET.,
R. ராஜேஷ்குமார் M.A., M.Phil.

ஆசிரியர் குழு
உதவிப் பேராசிரியர்கள், காட்சித் தொடர்பியல் துறை
B. ராமகிருஷ்ணன் M.F.A.,M.Phil.,
முனைவர் S. ரகுநாதன் M.A., PGDAPR., MA., Ph.D.,
G. பரணீதரன் M.Sc.,
H. முஹம்மத் பயாஸ் M.Sc.,

மாணவர்கள், காட்சித் தொடர்பியல் துறை
T.M. கரண், R. வெற்றி செல்வன்,

நிருபர்கள்
M. பாண்டியன், S. சுஜித்குமார் ,
R. அஸ்வந்த் கணேஷ் R.தீபக்குமார்

ஒளிப்படக் கலைஞர்கள்
K. அரவிந்த் குமார், A. வசந்த பிரியன்,
R.பாலசுப்ரமணியன், A. ரியாஸ்

தொடர்புக்கு
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020

காட்சித் தொடர்பியல் துறையின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து வெளிவர தங்களின் கருத்துக்கள், படைப்புகள், மற்றும் துறை செய்திகளை எங்களுக்கு அனுப்பவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
துறைத்தலைவர்
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020
jmcviscom@gmail.com

மாணவர்களின் பயிற்சிக்காக வெளியிடப்படும் இந்த இதழில் வரும் கருத்துக்கள் அனைத்தும் துறையின் கருத்தல்ல.

'ஜமாலியன் டைம்ஸ்' மாத இதழுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் மக்கள் குரலுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் பப்ளிகேஷன்ஸ் சார்பாக அச்சிடுவோர்
மக்கள் குரல் நடுநிலை நாளேடு TRINITY MIRROR

**துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு ஒரு வேண்டுகோள்**

ஜமாலியன் டைம்ஸ் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது உங்கள் கருத்துக்களை தமிழில் எழுதி கடிதம் மூலமாகவோ அல்லது ஈமெயில் மூலமாகவோ அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்,
ஜமாலியன் டைம்ஸ்,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620020
jmcviscom@gmail.com

### திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்

## பகடிவதை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் பகடிவதை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்ற போது எடுத்தப்படம்.

திருச்சி, ஆக.23– திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் பகடிவதை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சமூக பணித்துறை உதவி பேராசிரியர் ஷேக் பரீத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பகடிவதையின் காரணமாக ஏற்படும் சமூக பிரச்சனைகளையும் மாணவர்களின் சிந்தனைகளில் ஏற்படும் எதிர்மறை விளைவுகளையும் விளக்கி கூறி அதை தடுப்பதற்கு உண்டான பகடிவதை சட்ட வழிமுறைகளையும் எடுத்துரைத்தார்.

கல்லூரியின் முதல்வர் இஸ்மாயில் முகைதீன், புதிதாக சேர்ந்த மாணவர்களுக்கு ஏற்படும் அச்ச உணர்வை போக்கும் வகையில் மூத்த மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் காஜா நஜிமுதீன், பொருளாளர் ஜமால் முகமது, துணைச்செயலர் அப்துஸ் சமது மற்றும் துணை முதல்வர் ஜார்ஜ் அமலரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். கல்லூரியின் பகடி வதை தடுப்புக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் கல்லூரியின் கூடுதல் துணை முதல்வர் ஹாஜா முஹைதீன் வரவேற்புரை நிகழ்த்தினார். மாணவர் பிரதிநித உஸ்மான் அஹ்மத் நன்றி உரை நிகழ்த்தினார்.

## மொபைல் டியூட்டர் லிமிடெட் – ஜமால் முகமது கல்லூரி இடையே புரிந்துணர்வு ஒப்பந்த அறிக்கை



திருச்சி. ஆக. 13– மொபைல் டியூட்டர் பிரைவேட் லிமிடெட் சென்னை40. மற்றும் ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி) திருச்சிராப்பள்ளி20. இடையே நடத்த புரிந்துணர்வு ஒப்பந்த அறிக்கை ஆகஸ்ட 9 (புதன்கிழமை) அன்று திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் சென்னையை சேர்ந்த மொபைல் டியூட்டர் பிரைவேட் லிமிடெட் (1968 நிறுவன சட்டத்தின் கீழ்) எண் 12 ஏ.ஹெட்சி ப்ளாக், 3–ம் தெரு, அண்ணா நகர்,. சென்னை–600 040 என்ற முகவரியில் இயங்கி வரும் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கும், அஞ்சல் பெட்டி எண்.806, எண் 7, ரேஸ் கோர்ஸ் சாலை,காஜாநகர், திருச்சிராப்பள்ளியில் இயங்கி வரும் திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி) க்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் வெற்றிகரமாக கையெழுத்தானது.

ஜமால் முஹம்மது கல்லூரியின் சார்பில் செயலர் & தாளாளர் காஜா நஜீமுதனும், மொபைல் டியூட்டர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் சார்பில் அதன் துணை தலைவர் செண்பகராஜ் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின் போதுகல்லூரியின் பொருளாளர் ஜமால் முஹம்மது, துணைசெயலர் அப்துல் சமது, கல்லூரியின் முதல்வர் இஸ்மாயில் முகைதீன், மற்றும் துணை முதல்வர், கூடுதல் துணை முதல்வர்கள், மொபைல் டியூட்டர் பிரைவேட் லிமிடெட் நிறுவன மனிதவளதுறை மேலாளர் அயாஸ், அரபுத்துறை தலைவர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்

பின்வருமாறு:

இஸ்டன்ஷிப் (பயிற்சிபட்டறை) கல்வி மற்றும்

பணி அனுபவ இலக்குகளை நோக்கி பரஸ்பர நன்மை என்ற அடிப்படையில் உறுதி செய்தல் மாணவர்களை அவர்களின் தேவைகளின் அடிப்படையில் வேலைவாய்ப்புக்கு தயார்படுத்துதல் பயிற்சியளித்தல். கல்லூரியால் எந்தெந்த அம்சங்களில் ஆலோசனை சேவைகளை வழங்க முடியும் என்பதை அடையாளம் காண ஒன்றிணைந்து செயல்படுதல். ஆசிரியர்கள் தங்கள் ஆலோசனை மற்றும் கருத்துக்களை வழங்கக்கூடிய பாடப்பகுதிகளை அடையாளம்

காணுதல். கல்லூரியைச் சேர்ந்த ஊழியர்கள்

மற்றும் மாணவர்களின் நலனுக்கா னிநுநுளீ படிப்புகளை வடிவமைத்தல் மற்றும் முதற்கட்டமாக அரபு மொழிபெயர்ப்பு, சரிபார்த்தல் போன்ற சேவைகளுக்காக அரபு மற்றும் ஆய்வுதுறையோடு ஒப்பந்தம் செய்யப்பட்டது.





### ஜமால் முகமது கல்லூரி காட்சி தொடர்பியல் துறையில்

## உலக புகைப்பட தினக் கொண்டாட்டம்







திருச்சி, ஆக 19: திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி காட்சி தொடர்பியல் துறை சார்பாக உலக புகைப்பட தினத்தை முன்னிட்டு 'ஷட்டர் அப்' என்ற புகைப்பட போட்டி நடைபெற்றது. இறை வணக்கத்தோடு தொடங்கப்பட்ட இந்நிகழ்வில், துறைத்தலைவர் திரு.லு.சண்முக வேலாயுதம் அவர்கள் வரவேற்புரை வழங்கி நிகழ்வைதொடங்கிவைத்தார்.

இதனை தொடர்ந்து இண்டிபெண்டன்ட் போட்டோகிராபர், தி நியூ யார்க் டைம்ஸ்,நைட லென்ஸ் ப்ளாக்,பார்ட்நூன்,ஏசியன் ஜியோ,தினமலர்,தினகரன்,டைம் அவுட் போன்ற பத்திரிக்கைகளில் தலைமை போட்டோகிராபருமான திரு.செல்வபிரகாஷ் லெட்சுமணன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பத்திரிகைத்துறையில் புகைப்படத்தின் முக்கியத்துவம் என்ன? நல்ல, அற்புதமான புகைப்படம் எடுப்பது எப்படி? புகைப்படம் எடுக்க எவ்வளவு உழைக்க வேண்டும் என்று பயிற்சி வழங்கினார்.இதில் ஒரு நிகழ்வாக அவர் எடுத்த சிறந்த புகைப்படங்களை காண்பித்து; ஒரு சிறந்த புகைப்படம் எடுப்பதற்கு பின்னால் உள்ள சவால்கள் என்னென்ன என்பதை எடுத்துரைத்தார்.

மேலும் மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் தெளிவான முறையில் பதில் அளித்ததோடு, மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு வாழ்த்துக்கள் கூறினார்.

இதனையடுத்து, இப்புகைப்பட போட்டியில் பங்கேற்ற மாணவர்களில் கேர் கல்லூரி மாணவர் திரு.குமரவேல் அவர்கள் முதல் பரிசு பெற்றார், இரண்டாவது பரிசை அதே கல்லூரியை சேர்ந்தவர்களான திரு.ராம்குமார் மற்றும் மூன்றாவது பரிசை திரு.நவீன் அவர்களும் பெற்றுச் சென்றனர். இறுதியில் தந்தை பெரியார் அரசு கல்லூரி மாணவர் திரு.ராஜேஷ் அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜமால் முகம்மது கல்லூரி காட்சி தொடர்பியல் துறை பேராசிரியர்கள் திரு. ராமகிருஷ்ணன் முனைவர் திரு. ரகுநாதன், திரு. பிரதபன், திரு. ராஜேஷ்குமார், திரு. பரணிதரன், திரு. முகமது ஃப்யாஸ் மற்றும் மாணவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின்

## 72–வது ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் (ஆண்கள் பிரிவு )




















திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் 72–வது ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் “எண்ணங்கள் அழகாக இருந்தால் கல்லூரி வாழ்க்கை சுயமுன்னேற்றத்துக்கு துணையாக இருக்கும்”

பெரம்பலூர் துணை காவல்துறைக் கண்காணிப்பாளர் வல்லவன் பேச்சு

திருச்சி,ஆக.20– திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் 72–வது ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அனைவரையும் வரவேற்றார்.

பெரம்பலூர் துணை காவல்துறைக் கண்காணிப்பாளர், (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் துறை) மற்றும் ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவருமான எம்.எஸ். எம் வல்லவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி பேசிய அவர்,

ஜமால் முகமது கல்லூரி தனக்கு சமூகத்தையும். சகோதரத்துவத்தையும் கற்றுத்தந்தாகவும் மாணவர்கள் தனது கல்லூரி வாழ்க்கையில் சகிப்புத்தன்மை, பணிவு,

பண்பாடு. பிறரை மதித்தல் போன்ற குணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். கனவுகளும்,எண்ணங்களும் அழகாக இருந்தால் கல்லூரி வாழ்க்கை சுயமுன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருக்கும்.

பத்து வயதில் விளையாட்டையும் இருபது வயதில் படிப்பையும் முப்பது வயதில் உழைப்பையும் நாற்பது வயதில் சேமிப்பையும் ஐம்பது வயதில் குடும்பத்தையும் அறுபது வயதில் மனைவியையும் எழுபது வயதில் தானதர்மங்களையும் எண்பது வயதில் இறை மற்றும் மரணத்தையும் காலம் முழுவதும் தாய்மண்ணையும் தாய் நாட்டையும் காதலிக்க வேண்டும் என கூறினார்.

முன்னதாக, இளங்கலை வணிகவியல் துறையைச் சார்ந்த மாணவர் அன்புச்செல்வன் தலைமையில், கலை மற்றும் அறிவியல் துறைகளைச் சார்ந்த மாணவர்கள் பங்கேற்ற 18 அணிகளின் அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த ஜமால் முகமது கல்லூரியின் மாணவர்கள், சிலம்பம், சுருள் வீச்சு, வாள் வீச்சு, கொடிக் கொம்பு சுற்று, துலா பந்தம் சுற்றுதல், நடுக்கம்பு சுற்றுதல்,வேல் கம்பு மற்றும் நெருப்பு கம்பு சுற்றுதல் ஆகியவற்றில் தங்கள் திறமையை சிறப்பு விருந்தினர் முன்னிலையில் வெளிப்படுத்தினர்.

100 மீட்டர், 400 மீட்டர் தொடர் ஓட்டம். கயிறு இழுக்கும் போட்டிகளின் இறுதி ஆட்டம் நடை பெற்றது. வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இளங்கலை மற்றும் முதுகலை கணினி செயல்பாட்டுத்துறை மாணவர்கள் ஒட்டு மொத்த போட்டிக்கான வெற்றிக்கோப்பையை பெற்றனர்.

கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம். ஜே. ஜமால் முஹம்மது, உதவிச்செயலாளர் கே. அப்துஸ் சமது, கல்லூரி ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குநர் கே.என் அப்துல் காதர் நிஹால். விடுதி நிர்வாக இயக்குநர் கே.என். முகமது ஃபாசில்,பெண்கள் விடுதி இயக்குநர் ஜே. ஹாஜிரா ஃபாத்திமா. கூடுதல் துணை முதல்வர்கள் ஏ. இஷாக் அகமது, ஏ.ஜே. ஹாஜா முகைதீன். கல்லூரியின் தேர்வு நெறியாளர், நிதி ஆளுநர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, கல்லூரியின் உடற்கல்வித் துறையின் இயக்குனர் ஷாயின்ஷா, உடற்கல்வித் துறையின் ஆண்டு அறிக்கையை சமர்பித்தார். நிறைவாக, கூடுதல் துணை முதல்வர் ஜார்ஜ் அமலரெத்தினம் நன்றி கூறினார்.

திருச்சி ஜமால் முகமதுகல்லூரி

## விளையாட்டுப் போட்டிகள் (மகளிர் பிரிவு )















திருச்சி, ஆக. 24– திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மகளிர் பிரிவு விளையாட்டு விழா நடந்தது. கல்லூரி தாளாளர் காஜா நஜீமுதின் தலைமை வகித்தார். ஓட்டப்பந்தயம், நீளம், உயரம் தாண்டுதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு இந்திய மகளிர் கூடைப்பந்து அணி முன்னாள் கேப்டன் அனிதா கேடயம் மற்றும் பரிசு வழங்கி பேசுகையில், ‘எந்த துறையில் உயர்நிலை சென்றாலும் கல்வி கற்றுத் தந்த ஆசிரியர், பெற்றோரை மறந்து விடக்கூடாது. கல்வியுடன் விளையாட்டிற்கு முக்கியத்துவம் தந்தால் உடல் நிலை மேம்படும்’ என்றார்.

போட்டியின் ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை கம்ப்யூட்டர் அறிவியல், தகவல் தொழில் நுட்ப துறை மாணவிகள் பெற்றனர்.

கல்லூரி துணை முதல்வர் ஜார்ஜ் அமலரத்தினம், உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## STUDENTS' CORNER

## கதை சொல்லும் ஓவியங்கள்





A.KAVIARASAN

2nd B.Sc. VISUAL COMMUNICATION